காஞ்சி

ஆசிரியர்

அண்ணாதுரை



ஒளி இல்லை! வெப்பம் இருக்கிறது!!

மலர் 1 11—10—64 இதழ் 12

ஒளி இல்லை! வெப்பம் இருக்கிறது!—நேரு இல்லாத பாராளுமன்றம் குறித்து மனமாசு அற்ற நிலையினர் தரக்கூடிய மதிப்பீடு இஃதே என்பதனை மிகத் தெளிவாக, நடைபெற்று முடிந்த பாராளு மன்றக் கூட்ட நிகழ்ச்சிகள் எடுத்துக் காட்டுகின்றன.

பாராளுமன்றத்தில் நேரு இருக்கிறார் என்பது, மணிமுடியில் ஒளிவிடும் மாணிக்கம் இருக்கிறது என்று கூறத்தக்க விதமாக அமைந்திருந்ததனை அனைவரும் உணர்ந்திடத்தக்க நிலையினை பாராளு மன்ற நடவடிக்கைகள் எடுத்துக் காட்டின.

நேரு பண்டிதர் இருந்த நாட்களில் அவரை எதிர்த்தோர் இல்லையோ எனில், நிரம்பப்பேர் இன்று போலவே அன்றும் காங்கிரசாட்சி முறையினை எதிர்த்தபடி இருந்தனர்—ஆட்சித் தலைவர் என்பதற்காக நேரு பண்டிதரின் சொல்லிலும் செயலிலும் தமக்கு உள்ள எதிர்ப்புணர்ச்சியைத் தங்கு தடையின்றி எடுத்துக் காட்டி வந்தனர், நம்பிக்கையுடன், அச்சமற்று.

ஜனநாயகக் கடமையினைச் செய்கின்றனர், அதற்காக அவர்களிடம் அருவருப்பு கொள்வதோ, அழித்தொழிக்க வேண்டும் என்று கருதுவதோ அறமாகாது என்பதனை நன்கு உணர்ந்து, அந்நெறி ஒழுகுபவர் நேரு பண்டிதர், எனவே கண்டனங்களை, அவற்றில் கடுமை மிகுந்திருப்பினும், நெரித்த புருவம் காட்டித் தீய்த்துப் போடாமல், நேரிய முறையில் அலசிப் பார்த்து, கொள்ளத்தக்கனவற்றைக் கொள்ளும் பண்பாளர் நேரு என்பதனால் நம்பிக்கையுடன் பணியாற்றினர்; அச்சமற்றுத் தமது கருத்தினைத் தெரிவித்து வந்தனர்.

அரசுத் தலைவர் என்ற முறையில் எதிர்ப்பாளர்களின்மீது கணை தொடுத்திட நேரு தயங்கினதில்லை என்ற போதிலும், கோபம் கொதிப்பு கொண்டு, மனநிலையில் அதிர்ச்சி ஏற்படுத்திக்கொண்டு, அவர் தமது பேச்சிலே நச்சு கலந்து வெளியிடும் இயல்பினை வெகுவாகக் கட்டுப்படுத்தி வைத்திருந்தார்.

தமக்கு இந்தியாவிலும் வெளியிலும் அமைந்திருந்த சிறப்பு நிலை காரணமாக, மற்றெவரும் தம்மிலும் தரத்தில் திறத்தில் குறைந்தவரே என்ற எண்ணம் எழும்பிடுவது தவிர்க்க முடியாதது என்றபோதிலும், மக்களாட்சி முறையின் மாண்பே, மாறுபாடான கருத்தினைப் பொறுமையுடனும் பொறுப்புணர்ச்சியுடனும் கேட்டுக்கொள்வதும், சீர்தூக்கிப் பார்ப்பதும் எனும் முறையைப் பொறுத்தே உளது என்பதனை நன்கு அறிந்து வந்தவர் என்பதனால், 'எவரிலும் நான் மேலோன்' என்ற உணர்ச்சி தடித்திடாதபடி தமக்குத் தாமே கட்டுப்பாடு ஏற்படுத்திக்கொண்டு ஒழுகிவந்தவர்.

எதனையும், எந்த மன்றம் மறுத்திடினும், மக்களிடம் எடுத்துக் கூறி அவரின் இசைவினை எளிதிலே பெற்று மெய்ப்பித்துக் காட்டிட முடியும் என்ற நிலையினராக இருந்துவந்த போதிலும், எதிர்ப்பாளர்களின் எண்ணத்தைத் துச்சமென்று தள்ளிடாத போக்கினை மேற்கொண்டு, பாராளு மன்ற முறைக்கு ஒளியூட்டி வந்தார். இன்று அந்த ஒளி இல்லை!—வெப்பம் இருக்கிறது.

ஜனநாயகத்துக்கு எழிலளிக்கும் ஒளி மறைந்துவிட்டது; அந்த இடத்தில் இன்று, 'மிகப் பெரிய கட்சி' எனும் வலிவு வெப்பமாகி நின்றுகொண்டிருக்கிறது.

லால்பகதூர், இந்த வலிவின் துணையினைக் கொண்டே, பெரிதும் தமது துரைத்தனத்தை நடத்திச் செல்லக்கூடியவர்-மறைந்த ஒளிக்கு ஒப்பான, அல்லது அதற்கு அடுத்ததான ஒளியினைத் தரவல்லவர் என்று அவருடைய நெருங்கிய நண்பர்கள்கூடக் கூறிடத் துணியமாட்டார்கள்.

நேரு பண்டிதரின் கண்களிலே காணப்பட்டுவந்த கனிவுபோல், லால்பகதூரிடம் எதிர்பார்ப்பவர்கள், நிச்சயம் ஏமாற்றமடைவார்கள். சிற்சில வேளைகளில் லால்பகதூரின் கண்கள் கண்டிப்பைக் காட்டிடக் காணலாம், எளிமை உணர்ச்சியை எடுத்தியம்பிடுவதைக் காணலாம், என்னிடம் அதெல்லாம் நடக்காது என்றுகூறிடும் 'பாணி'யைக் காணலாம், ஆனால் இவர் மிகப் பெரியவர் எனினும் எவர் கூறுவதனையும் மதிப்பளித்துக் கேட்டு ஆராய்ந்திட முன்வரும் பெருங்குணம் கொண்டவர் என்பதனைக் காட்டிடும் கண்களும், ஆங்

கிருந்து மலர்ந்திடும் கனிவும், காணல் இயலாது, இல்லை.

கட்சியை நடாத்திச் செல்லும் ஆற்றல் உண்டு; எதிர்ப்பாளர்களைத் தாக்கிடும் திறமை உண்டு; எதனையும் நுணுகி ஆராய்ந்திடும் திறமை உண்டு, போலிப் பெருமையைத் தேடிடாமல் நாடிடாமல், தமக்கென்று தாம் வகுத்துக்கொண்ட வழியில், அச்சமின்றி சென்றிடும் போக்கு உண்டு எனப் பல சிறப்பு இயல்புகளை லால்பகதூரிடம் காணலாம்; ஆனுல் எவர் நெஞ்சிலும் இடம் பெறத்தக்க கனிவு நிரம்பியவர் என்ற தனித் தன்மையை லால்பகதூரிடம் காணமுடியாது.

எவரிடமும் இருக்கத்தக்கது எனில், அதிலே தனித்தன்மையோ, சிறப்போ மிகுதியாக இருந்திட முடியாது; எனவே, நேருவிடமிருந்து கிடைத்து வந்த ஒளி, லால்பகதூரிடம் இல்லை என்பது அவருடைய மதிப்பைக் குறைத்துவிடாது. மதிப்பீடு என்பது ஒன்று, அவரவர்க்கென்று அமைந்துள்ள மதிப்பு என்பது பிறிதொன்ருகும்.

இன்று உள்ள நிலையில், ஒளி இல்லை, வெப்பம் இருக்கிறது என்று கூறுவது, உண்மையை வண்ணப் பூச்சின்றி எடுத்துக் காட்டுவதாகும்.

வெப்பம் என்று நாம் கூறுவது, காங்கிரஸ் கட்சிக்கு இன்றும் உள்ள வலிவினையும், அந்தக் கட்சியிலே லால்பகதூருக்கு உள்ள செல்வாக்கினையுமாகும். நேருவின் மறைவினுல், ஒளி மறைந்துவிட்டதேயன்றி, வெப்பம் போய்விடவில்லை, காங்கிரஸ் கட்சிக்கு உள்ள வலிவு குன்றிவிடவில்லை.

அங்ஙனமாயின், ஒளி மறைந்ததுபற்றிக் கவலைப் படுவானேன், குறிப்பிட்டுக் காட்டுவானேன் எனில், காங்கிரஸ் கட்சிக்கு அதன் நடவடிக்கைகள் காரணமாக, பொதுமக்களின் எதிர்ப்பு மேலோங்கும் போதெல்லாம், ஒளி முன்னின்று, எதிர்ப்பினைத் தகர்த்திட மெத்தப் பயன்பட்டு வந்தது. ஒளி மறைந்ததால் இன்று அந்நிலை இல்லை.

ஒளி, காணக் காட்சியாக இருப்பது; வெப்பம் இயற்கையாகவே அருவருப்பைக் கிளறத்தக்கது. ஒளி இல்லை, வெப்பம் இருக்கிறது என்பதனை இக்கருத்தின் துணைகொண்டு எடைபோட்டுப் பார்ப்பவர்கள், இன்றுள்ள நிலைமையினை நன்கு உணரலாம்.

லால்பகதூர், பாராளு மன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததைக் கண்டவர்கள், இதனை மேலும் தெளிவாக உணர முடிந்தது. ஒரு நிகழ்ச்சியினை மட்டும் எடுத்துக்காட்டுக்காகக் குறிப்பிட விரும்புகிருேம்,

கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் முகர்ஜி அவர்கள், நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் பேரில் பேசும்போது,

> நேருவின் பாதையினின்றும், முறையினின்றும், லால்பகதூர் திசைமாறிப் போகிருர், வழுவிச் செல்கிருர்,

என்ற கருத்துப்படப் பேசினுர்.

லால்பகதூர் இதனை, மென்மையாக மறுத்திருக்கலாம்.

இதனை ஓர் நல்வாய்ப்பாகக்கொண்டு, நேரு பாதை பற்றியும் முறை குறித்தும் தமக்கு உள்ள ஆர்வத்தை எடுத்துக் கூறி இருக்கலாம்.

அல்லது, மிகுதியான எண்ணிக்கை பலம் இருக்கும்போது, கஷ்டப்பட்டு வாதாடிக் கொண்டிருப்பானேன் என்ற முறையில் நடந்துகொள்ளும் விருப்புடன் முகர்ஜியின் கூற்றுக்கு ஆதாரமில்லை என்று கூறிவிட்டு அமர்ந்திருக்கலாம். ஆனுல், இதனை வாய்ப்பாகக் கொண்டு, லால்பகதூர் பேசியிருப்பது, ஒளி இல்லை, வெப்பம் இருக்கிறது என்பதனை மெய்ப்பிப்பதாக இருந்தது.

நேரு பாதையினின்றும், முறையினின்றும், நானே என் அரசாங்கமோ வழுவிப் போய்விடவில்லை என்று கூறுவார் என்று எதிர்பார்த்திருந்தவர்கள் திடுக்கிடக் கூடிய முறையில், லால்பகதூர்,

> "வழுவிப் போவதாகக் குறை கூறினுர்கள். தெளிவாக, திட்டவட்டமாக ஒன்று கூறி விடுகிறேன். காலத்துக்கும் நிலைமைக்கும் மக்கள் நலனுக்கும் ஏற்ற முறையில்: நான், சில மாற்றங்களை மேற்கொள்வேன்"

என்று பேசினுர்.

இதுவே, பலரை வாய் பிளக்க வைக்கக்கூடியது.

நேருவின் வாரிசு என்று நேரு இருந்த நாட்களிலேயே சுட்டிக் காட்டப்படத்தக்க நிலையில், அவருடைய நம்பிக்கைக்குப் பாத்திரராக இருந்த லால்பகதூரா, நான் சில மாற்றங்களை மேற்கொள்வேன் என்று, தடித்த தொனியுடன் பேசுவது! இது நாம் துளியும் எதிர்பாராததாயிற்றே!! என்று எண்ணியிருப்பர். லால்பகதூர், இத்துடன் நின்ருரில்லை.

> காந்தியாரின் முறைகளிலிருந்தும் வழிகளிலிருந்தும் நேரு, சிற்சில நேரத்தில் மாறி நடந்தார்!

என்றும் சொல்லிவைத்தார்.

கேட்பவர்களின் செவியில் ஒரு குடைச்சல் ஏற்பட்டது. இதென்ன, நேரு எப்படி காந்தி பாதையிலிருந்து

வேறு பக்கம் சென்றரோ அதுபோல, நேரு பாதையி லிருந்து நான் மாறுபட்டால் என்ன தவறு என்று கேட் பதுபோலப் பேசுகிருரே—நாட்கள் நூறு ஆவதற்குள், நான் எனது முறை—நான் செய்யும் மாற்றம்—என்ற குரல் கிளம்புகிறதே என்று எண்ணிப் பலர் ஆயாசப் படலாயினர். லால்பகதூர் மேலால் சென்ருர்.

லெனின் வகுத்த வழியிலே ஸ்டாலின் சில மாற்றங்களைக் கண்டார்.

ஸ்டாலின் கண்ட வழி முறையில், குரு ஷாவ் சில மாற்றங்களை மேற்கொண்டார்.

அதுபோல், நான் நேரு கண்ட வழி முறையில் சில மாற்றங்களைச் செய்வேன்.

லால்பகதூரின் இந்த விளக்கத்துக்குப் பிறகு, காங்கி ரஸ் வட்டாரத்திலேயே பலருக்கு, நிலைமை புரிந்துவிட் டது; ஒளி இல்லை! வெப்பம் இருக்கிறது! என்று.

அதிலும் ஸ்டாலினுடைய முறைகளை குருஷாவ் மாற்றியதை ஓர் எடுத்துக் காட்டாகவும்; தமது போக் குக்குத் துணைநிற்கும் ஆதாரமாகவும் லால்பகதூர் எடுத் துக் காட்டியது, அருவருப்பை மட்டுமல்ல, ஓரளவு அச்சத்தைக் கூடக் கிளறிவிட்டது என்று கூறலாம். ஏனெனில், ஸ்டாலின் நினைவு எத்தனை அலங்கோல மாக்கப்பட்டுப் போய்விட்டது, குருஷாவ் காலத்தில் என்பதனை அனைவரும் அறிவார்கள்.

தமது பேச்சு, எத்தகைய விதமாக வெல்லாம் பொருள்தரக் கூடும் என்பதனைச் சரியாக அறிந்து கொள்ளாமல், லால்பகதூர், ஸ்டாலின் — குருஷாவ் தொடர்பு பற்றிப் பேசினுர் என்றிருக்குமானுல், முறை யாகப் பேசினரில்லையே என்ற வருத்தம் மட்டுமே மேவிடும்.

என்னவிதமாகப் பொருள் கொண்டிடினும் கவலை யில்லை என்ற போக்கிலே பேசி இருந்திருப்பாரானுல், வருத்தத்துடன், கலக்கம் கொள்ளவே எவருக்கும் தோன்றும்.

அரசுப் பொறுப்பை மேற்கொண்டு அவர் ஆற்றிய முதல் பேருரையிலேயே, இத்தகைய 'தொனி' தோன்றி விட்டது, ஒளி இல்லை! வெப்பம் இருக்கிறது! என்பதனை மேலும் மெய்ப்பித்துக் காட்டுவதாக இருக்கிறது.

கட்சிக்கு இன்றுள்ள வலிவு, லால்பகதூராரின் ஆட்சிக்கு அரணுகவும், கருவியாகவும் பயன்படத் தக்கது. மறுப்பார் இல்லை.

ஆனுல், அந்த வலிவு ஆட்டம் கொடுத்து வரு கிறது என்பதும், அந்த வலிவினைத் தட்டிக் கேட்கவும், தடுத்து நிறுத்தவும், தொடர்ந்து முயற்சிகள், பலமுனை களிலிருந்தும் — தொத்திக் கொண்டவர்கள், நத்திப் பிழைப்பவர்கள் இருப்பினும் — நடைபெற்றுக்கொண் டிருப்பதும், உலகறிந்த இரகசியம்.

இத்துடன், லால்பகதூராரின் பேச்சும் இதுபோல அமைகிறது என்ருல், எதனை மிகப்பெரிய வலிவு என்று இன்று நம்பிக்கொண்டிருக்கிருர்களோ அதனையே குலைத்திடத்தக்கதான ஓர் நிலைமை ஏற்பட்டுவிடும் என்று கூருமலிருக்க முடியவில்லை.

இத்தனைக்கும் காந்தி வழியினின்று நேரு மாறினது போல, ஸ்டாலின் வழியினின்றும் குருஷாவ் மாறினது போல, நேரு வழியினின்றும் நிலைமைக்கு ஏற்றபடி நான் மாறுவேன் என்றுகூறிச் சமாதானம் அளிக்க வேண்டிய வகையிலோ, வேகத்திலோ, லால்பகதூர் எந்தப் பெரிய மாறுதலையும் புகுத்திவிடவுமில்லை.

இந்நிலையில், முகர்ஜிக்குப் பதிலளிக்கும் போக்கில் லால்பகதூர் பேசியிருப்பது, தமது போக்கை விளக்கப் பேசியதாக நமக்குப்படவில்லை — தமது நிலையை — தகுதியை அனைவரும் உணரட்டும் என்பதற்காகவே பேசியதாகப் படுகிறது. நல்ல துவக்கம் என்று இதனைக் கொள்வதற்கில்லை. ஒளி இல்லை! வெப்பம் இருக் கிறது!!

'காஞ்சி' சந்தாவிகிதம்

ஆண்டு சந்தா	ரூ.	10—00
ஆறுமாத சந்தா	ரூ.	5—00

ஆறுமாத சந்தாவிற்குக் குறைந்து அனுப்புவதற்கில்லை.

உரிமையாளர்,
'காஞ்சி' அலுவலகம்,
சின்ன காஞ்சிபுரம்.

கைதி எண் 6342



தம்பி!

இன்று பகல் பனிரண்டு மணி சுமாருக்குத்தான் மதியும், மறியலில் ஈடுபட்ட மற்ற நான்கு தோழர்களும் இங்கு கொண்டுவரப்பட்டார்கள் என்று தெரிந்து கொண்டேன்—பார்க்கக்கூட முடியவில்லை. இதிலிருந்து சிறையிலே, நான் இருக்கும் பகுதி தனிச் சிறையாக இருந்து வருகிறது என்பதைத் தெரிந்துகொள்ளலாம். இங்கு வார்டர்கள்கூட அதிகமாக வருவதில்லை. என்னைக்காண யாராவது வருகிறபோதுதான், சிறை அதிகாரிகளைக்கூட நான் காணமுடிகிறது. மாலை 6-30 மணிக்குப் போட்டுப் பூட்டிவிட்டால், காலையில் திறந்து விடுகிற வரையில், தனிமைதான்.

இன்று என்னைக்காண, ராணியும் வரவில்லை. காலை முதற்கொண்டே கடுமையான மழை, விட்டுவிட்டுப் பெய்துகொண்டிருப்பது, எனக்கு இங்கே சங்கடமாக இருப்பதுபோலத்தான் வெளியே இருந்து இங்குவர எண்ணுபவர்களுக்கும் இருந்திருக்கும். ஆகவே இன்று வெளியிலிருந்து வரக்கூடியவர்கள் மூலமாகவும், மறியல் எப்படி நடந்தது, கைது செய்யப்பட்டது எப்படி, எப்போது என்ற விஷயம்கூடத் தெரிந்து கொள்ள வழி ஏற்படாமல் போய்விட்டது. கிட்டத்தட்ட கண்காணாத் தீவிலே கொண்டுபோய் வைத்திருப்பது போன்ற நிலைமையே இருப்பதை உணருகிறேன். முன்பு எப்போதும் இப்படி ஒரு நிலைமை சிறையில் இருந்த தில்லை. இம்முறை இவ்விதம் இருக்கக் காரணம் என்ன வென்றும் புரியவில்லை. என்னுடன் இங்கு இருக்கும் தேவகோட்டையார் சொன்னார், 'ஒரு விஷயம் கேள்விப் பட்டேன், சிறையில் நாம் இருக்கும் பகுதியிலே, ஒரு சி. ஐ. டி. போடப்பட்டிருக்கிறதாம் — அதுவும் வார்டர் உடையிலேயாம்'' என்றார். நாலைந்து நாட்களுக்கு முன்பு இதேபோல, இங்கு வேலை செய்ய வரும் 'கைதி' மூலமாகவும் இதே போன்ற செய்தி கேள்விப்பட்டேன். எவ்வளவுதூரம் உண்மையோ தெரியவில்லை. ஆனால் ஒன்று மட்டும் புரிகிறது, வார்டரிலிருந்து சிறை அதிகாரிகள் வரையில், என்னை அணுகுவதுகூட இல்லை— அந்த அளவுக்குத் தனியனாகத் வைத்திருக்கிறார்கள். தனியன் என்று நான்கூறுகிறேன், அவர்கள் 'சனியன்' என்று என்னைப்பற்றி எண்ணிக்கொண்டிருக்கிறார்களோ என்னவோ! இத்தனைக்கும் எனக்கோ, நமது கழகத் தோழர்களுக்கோ சிறை விதிகளுக்கு உட்பட்டு நடப்பதுதான் வழக்கம் என்பது சிறை அதிகாரிகளுக்கும் தெரியும். பத்திரிகையில் சென்ற கிழமைதான் படித்துப் பார்த்தேன், வேலூர் சிறை அதிகாரி காப்டன் ரகுநாதன் என்பவர் அரசியல் கைதிகளிலேயே, தி. மு. கழகத்தினர்தான் மிக ஒழுங்காக நடந்துகொள்பவர்கள் என்று பேசியிருப்பதை.

கைவலி குறைந்தபாடில்லை. பல தைலங்களைப் போட்டாகிவிட்டது. இளங்கோவன் கொண்டுவந்து கொடுத்த ஒரு புதிய மருந்தையும் போட்டுப்பார்த்தேன். வலி குறையவில்லை, இங்கு டாக்டரிடம் கூறும்போதெல்லாம், மாத்திரை கொடுத்தேனே, சாப்பிட்டீர்களா என்று கேட்கிறார், ஆம்! என்று நான் சொன்னதும், வலி குறைந்துவிட்டிருக்க வேண்டுமே! என்றுதான் கூறுகிறார். எதனாலே வலி? சதை வலியா? நரம்பிலே ஏதாவது வலியா? சுளுக்கா? என்று கண்டறியலாம். டாக்டர் அந்தக் கட்டத்துக்கே செல்லவில்லை. இதனை இரண்டொரு முறை சிறை அதிகாரியிடமும் குறிப்பாக சொல்லிப்பார்த்தேன். கேட்டுக்கொண்டார், அவ்வளவு தான். எக்ஸ்-ரே எடுத்துப் பார்த்த பிறகு, இதற்குத் தக்க சிகிச்சை செய்தால் நல்லது என்று எனக்குத் தோன்றுகிறது. எனக்குத் தோன்றி என்னபலன்? டாக்டருக்கல்லவா அந்த எண்ணம் தோன்றவேண்டும். நல்லவேளையாக வலி, இடதுகரத்தில்—இல்லையென்றால் இதனை எழுதக்கூட வழி கிடைத்திருக்காது. முன்பு நான் சிறையில் இருந்த நாட்களில், இரவுக் காலத்தில் அடிக்கடி வார்டர்கள் வந்து போவார்கள்—ஏதாகிலும் உடல் நலக் குறைவு ஏற்பட்டால் அவர் மூலம்சொல்லி, வைத்திய உதவி பெறலாம். இங்குதான் பகலிலேயே, வார்டர்கள் வருவது இல்லையே. இரவு நேரத்தில் யார் வரப்போகிறார்கள்!!

என் கதி இது என்றால், என்னுடைய கூட்டாளிகள் நால்வர் நிலைபற்றி அறிந்தபோது, இதைவிட வேதனையுடையதாக இருப்பது தெரிகிறது. அவர்களுடைய துணி மணிகளெல்லாம் சைதைச் சிறையில் இருக்கிறது. அவர்களை இங்கு அழைத்து வந்தபோது,

—வழக்கு மன்றத்திலிருந்த போலீஸ் அதிகாரிகள், உடனே, நால்வருடைய சாமான்களையும், மத்திய சிறைக்குக் கொண்டு வந்து சேர்ப்பதாகக் கூறினர். கூறியதோடு அவர்கள் கடமை முடிந்து விட்டது போலிருக்கிறது. அவர்களுக்குச் சாமான்கள் வராமல், குளிக்கவும் முடியாமல் கஷ்டப்படுவதாக, அங்கு போய் வந்த கைதிகள் மூலம் அறிந்துகொண்டேன்.

இன்று மாலை ஐந்து மணி சுமாருக்கு, சாமான்கள் கொண்டுவந்து தரப்பட்டதாகக் கண்டுகொண்டேன்—தோழர் T. M. பார்த்தசாரதி ஒரு பெட்டியுடன், உள்ளே சென்றுகொண்டிருப்பதை, நான் மாடிப்படியில் நின்றபடி பார்த்தேன். அவர் என்னைப் பார்த்ததாகத் தெரியவில்லை.

இந்த அளவுக்குத் தொடர்பற்று, தோழமையற்று, சிறையிலே தள்ளப்பட்டுக் கிடக்கும் இந்த அனுபவம் முற்றிலும் புதிது; ஆனால் இதுவும் தேவையானது என்று எண்ணி ஒருவிதத்தில் திருப்திப் பெறுகிறேன்.

நேற்று போலவே தான் இன்றும் மறியல் செய்த தோழர்கள் ஐவர் இங்கு கொண்டு வரப்பட்டார்கள் என்று அறிந்துகொண்டேன், அவர்களும் சிறையில் வேறோர் பகுதியில்தான்.

பகல் 11 மணிக்குமேல், நாவலர், கருணாநிதி, நடராசன், கோவிந்தசாமி, அரங்கண்ணல், சத்தியவாணி, இளங்கோவன், ராணி ஆகியோர் வந்து பேசிக்கொண்டிருந்தனர். மறியல் பற்றி இரண்டொரு நிமிடம் கூறினார்கள். இளங்கோவன் காஞ்சிபுரத்திலிருந்து புத்தகங்கள் சிலவற்றைக் கொண்டுவந்து கொடுத்தான். பரிமளத்துக்குத் தேர்வு என்பதுபற்றி ராணி மூலம் தெரிந்துகொண்டேன்.

முதலிலே மிகத்தைரியமாக இருந்துவந்த தொத்தா இப்போது குழம்பிப் போயிருப்பதாக இளங்கோவன் சொல்லக் கேட்டு மெத்தக் கவலையாக இருந்தது. என்னை வந்து பார்க்கவேண்டும் என்று ஆவலாக இருப்பதாகச் சொன்னான். தொத்தாவின் உடல் நிலை இருக்கும் விதம், சென்னைப் பயணத்துக்கு ஏற்றதாகவும் தென்படவில்லை. எதற்கும் கொஞ்சநாள் பார்த்து, இரண்டு மூன்று வாரங்கள் பொறுத்துப் பார்க்கலாம் என்று சொன்னேன். ராணிக்கு சோகம் தீர்ந்தபாடில்லை என்பதை, கண்கள் வெளியிட்ட திகைப்பு காட்டிற்று.

சிறை அதிகாரிகள், நிலைமைகளையோ, நினைப்புகளையோ அறியாதவர்களல்ல—தொத்தாவைப் பற்றிய பேச்சு வந்த உடனே, சிறை பெரிய அதிகாரி, மிக அக்கரை காட்டி, அவர்கள் உடல்நிலை, பாவம், சரியாக இருக்காதே என்றுகூடக் கூறினர்.

இத்தகைய பரிவு காட்டும் உணர்ச்சி இருக்கிறது என்றாலும், என்ன காரணமோ தெரியவில்லை, இந்த முறை என் விஷயத்தில் அக்கரையோ பரிவோ துளிகூடக் காட்டவில்லை. கைவலி விஷயமாக அவரிடம் சொன்னேன்—வெளியே உள்ள டாக்டர் எவரிடமாவது காட்டி, எந்தவிதமான வலி என்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும். வலிகுறையாததுமட்டுமல்ல, அதிகமாகி வருகிறது என்றும் சொன்னேன். மிகவும் கூச்சப்பட்டுக்கொண்டுதான் சொன்னேன். பார்க்கிறேன் என்றார். ஆனால் பிறகு அதுபற்றி ஒரு தகவலும் தெரிவிக்கப்படவில்லை. பிற்பகல் அவருக்கு உடல்நலம் இல்லை என்று வீட்டுக்குச் சென்றுவிட்டார் என்று தெரிந்து கொண்டேன். இரண்டு மூன்று நாட்களாகவே அடித்துக்கொண்டிருக்கும் குளிர்காற்றினால்கூட, இந்தவலி அதிகமாகி இருக்கும் என்று தேவகோட்டையார் ஆறுதல் கூறினர். அந்தவிதமான அன்பு வார்த்தைகளைக் கேட்கும்போது வலியே போய்விடுவதுபோலிருக்கிறது, ஆனால், இரவு முழுவதும் வலி வாட்டியபடிதான் இருக்கிறது.

வழக்கறிஞர் நாராயணசாமி கொண்டுவந்து கொடுத்த, 'சட்டம்'பற்றிய சில ஏடுகளைப் படித்து இன்புற்றேன். சட்டபுத்தகம் என்றால், என்னென்ன சட்டங்கள், எவ்வளவு தண்டனை என்ற இவைகளை விளக்கும் ஏடுகள் அல்ல. சட்டம் ஏன், எப்படி ஏற்பட்டது, ஏன் சமூகமும் தனி நபர்களும் அதற்கு அடங்கி ஒழுகிவருகிறார்கள், சட்டத்துக்கும் அரசுகளுக்கும் உள்ளதொடர்பு எத்தகையது, சட்டத்துக்கும் நீதிக்கும் உள்ள தொடர்பு எப்படி அமைகிறது, எப்படி அமைதல்வேண்டும் என்ற இத்தகைய சுவையான, பயன்தரும் விவரங்கள், விளக்கங்கள் தரும் ஏடுகள். அவைகளிலே காணப்படும் பல நல்ல கருத்துகளை, இங்கு எனக்கு நிலை செம்மைப்பட்டு மனம் தெம்பானபிறகு, எடுத்துக்காட்டக்கூட நினைக்கிறேன். நாளைக்கு, என்னைக்காண, அனேகமாக யாரும் வரமாட்டார்கள் என்று எண்ணுகிறேன்—இன்று நிரம்பப்பேர் வந்துபோனதால். நாளை மறுநாள், வழக்கு. சாட்சிகள் விசாரணை.

இன்று பத்திரிகைகளில், வெளிவந்த செய்திகளில் மெயில் தலையங்கம், மிக அருமையாக அமைந்திருக்கக் கண்டேன்.

இரும்பு அமைச்சர், கழகத்தை ஏசிக் கோவையில் பேசியதற்கு, 'மெயில்' மிகப் பொருத்தமாகப் பதில் அளித்திருந்தது.

உடலமைப்பைப் பார்த்தால் அதிக அளவு அலைந்து கட்சி வேலை செய்யக்கூடியதாகத் தெரியவில்லையே, எப்படி முடிகிறது இவ்வளவு வேலை செய்ய என்று என் உறவினர்களும், கட்சியில் ஈடுபாடு கொள்ளாத நண்பர்களும் என்னைக் கேட்பதுண்டு. மனதிலே கொழுந்துவிட்டு எரியும் ஒரு உணர்ச்சி தரும் வலிவுதான் காரணம் என்று பதில் கூறுவேன். ஆனால், உடலில், ஏதாகிலும் வலி ஏற்பட்டு, அது இன்னது என்று

புரிந்துகொள்ளும் நிலையும் இல்லை என்றாகிவிட்டால், மனதிலே ஒரு சோர்வு யாருக்கும் ஏற்பட்டுவிடுகிறது. அந்த நிலை எனக்கு. நரம்பிலே ஏதாகிலும் கோளாறு ஏற்பட்டு விட்டதோ; அல்லது ஏதாகிலும் உள்ளே இரணமோ என்றெல்லாம் சந்தேகம். எவ்வளவு நேரம், துண்டுத் துணியால் அழுத்திக் கட்டிவைத்துக் கொண்டிருப்பது. செல்வக் குடியில் பிறந்தவன் அல்ல என்றாலும், என்மீது மிகுந்த பாசம் கொண்டு, நான் ஒரு துளியும் வேதனைப்படக் கூடாது என்பதற்காகக் கண்ணுங் கருத்துமாக இருக்கும் குடும்பத்தில் பிறந்தவன். இங்கு சிறையில் உடல்நிலை கெட்டுக் கிடக்கிறது என்று 'ஜாடை மாடை'யாகத் தெரிந்தால் கூடத் துடித்துப் போவார்கள். எனவே அவர்களுக்குச் சங்கடம் ஏற்படுத்தக்கூடாது என்பதற்காக, என்னைக் காணவரும் வீட்டாரிடம், எதையும் காட்டிக்கொள்ளாமல் இருந்து வருகிறேன். தனிமையாக இருக்கும்போதோ, வலி பற்றிய நினைப்பு வளர்ந்துவிடுகிறது. என்னைப்போல, உடல் நலம் கெட்டு எத்தனை எத்தனை தோழர்கள் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறார்களோ என்று எண்ணுகிறேன்; ஏக்கம் கொள்கிறேன். ஆனால் அதே போது, இந்தி ஆதிக்கத்தினால் விளையக்கூடிய கொடுமைகளைப்பற்றிய எண்ணம் எழுந்துவிட்டாலோ, வலி, வேதனை எத்தனை அளவில் இருந்தாலும் பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும் என்ற துணிவு பிறக்கிறது. அந்த மருந்துதான், நானாக இங்கு தேடிப் பெற்றுக் கொள்ள முடிகிறது.

பொதுப் பிரச்சினைகளைப் பற்றி நண்பர்களிடம் பேசிப் பேசி, தெளிவு பெறுவதிலே சுவை காண்பவன் நான்; அந்த விருந்து இல்லை; வலிபோக்க மருந்தும் இல்லை. இதே நிலை நீடிக்குமானால், சிறைநினைவு பற்றித் தொடர்ந்து எழுதுவதுகூட இயலாததாகி விடும். ஓயாமல் எனக்குள்ள வலி பற்றியே எழுதி உன் மனதுக்குச் சங்கடம் ஏற்படுத்த விரும்பமாட்டேனல்லவா?

மாடிப்படியின்மீது நின்றுகொண்டு பார்க்கிறேன், விதவிதமான நோயின் பிடியிலே சிக்கி நொடித்துப் போய்க் கிடக்கும் 'பாதி மனிதர்கள்' கொண்டுவரப்படுகிறார்கள் — அடைக்கப்படுவதற்காக. குற்றவாளிகள்! ஆனால் பாபம், நோயாளிகள்! குற்றம்—நோய் இரண்டையும் மூட்டிவிடும் வறுமையின் பிடியிலே சிக்கிக் கொண்டவர்கள். இந்தக் கோரமும் கொடுமையும் குறைவதாகவும் தெரியவில்லை. அவர்களைப் பார்க்கும் போது, சமூகம் எத்தனை கோணலாகிக் கிடக்கிறது என்பது நன்றாகப் புரிகிறது. அவர்களும் என்னைப் பார்க்கிறார்கள் — பெரும்பாலானவர்கள் பச்சாதாப உணர்ச்சியுடன். அவர்கள் அதுபோல என்னைப் பார்ப்பதுகூடச் சிறை விதிகளுக்கு விரோதம் போலத் தெரிகிறது. ஏனெனில் என்மீது பார்வையைச் செலுத்துபவர்களிலே பலருக்கு, அடி—உதை—தலையிலே தட்டு! இப்படிக் கிடைக்கிறது. முணுமுணுக்கிறார்கள். என்னை மறுபடியும் பார்க்கிறார்கள்—இம்முறை அவர்களுடைய கண்கள் கேள்விக் குறிகளாகின்றன! இப்படி, காரண மற்று அடித்துத் துன்பப்படுத்துகிறார்களே, பார்த்துக் கொண்டுதானே இருக்கிறாய்; நியாயம் தெரியும் என்கிறார்களே உனக்கு, எங்களுக்காகப் பரிந்து ஒரு வார்த்தை பேசக்கூடாதா என்று கேட்கிறார்கள், பார்வையால்; புரிகிறது. ஆனால் நான் என்ன செய்ய முடியும்! நானே "குற்றவாளி"-கைதி—!! கேட்டால் ஒழுங்கான பதிலா கிடைக்கும்? உனக்குத் தெரியாது, சும்மா இரு! என்பார்களோ! இவர்களை இப்படி அடித்து உதைத்து அடக்கி வைக்காவிட்டால், சிறையை நடத்திச் செல்லவே முடியாது என்பார்களோ! அல்லது, மிரட்டி போ உள்ளே! என்பார்களோ, யார்கண்டார்கள்?

மனதிலே மூண்டுவிடும் சங்கடத்தைப் போக்கிக் கொள்ள படித்துக் கொண்டிருப்பதை 'முறை' ஆக்கிக் கொள்கிறேன். பல நிகழ்ச்சிகளையும் பலருடைய வாழ்க்கை வரலாறுகளையும் படிக்கும்போது ஏற்படும் 'இன்பம்' தனியானது; சுவைத்தவர்க்கே புரியும்.

வழக்கு மன்றத்திலே தருவதற்காக அறிக்கை தயாரிக்க, சட்ட புத்தகங்கள் சிலவற்றைப் படித்திட முனைந்ததுபற்றிக் கூறினேனல்லவா, அவைகளில் குறிப்பிடத்தக்கதாக, இயற்கையாக அமைந்துள்ள மனித உரிமைகளுக்கும், செயற்கையாக, சட்டத்தின் மூலம் ஏற்படும் கட்டு திட்டங்களுக்கும், மோதுதல் ஏற்படுமானால், எதற்கு அதிக மதிப்பளிக்க வேண்டும்? ஆக்கப்பட்ட சட்டங்களுக்கா — அடிப்படையாகவும் இயற்கையாகவும் மனித குலம் பெற்றிருக்கும் உரிமைகளுக்கா என்ற பிரச்சினை பற்றி எழுதப்பட்ட ஏடுகள் அமைந்திருந்தன. பல நீதிபதிகள் இந்த இயற்கை உரிமைகளுக்காகப் பரிந்து பேசி இருப்பதைப் படித்தேன். அதன் தொடர்பாக, சட்டங்கள் ஏன் தேவைப்பட்டன என்பது பற்றிய விளக்கநூலும் படித்துப் பயன் பெற்றேன்.

இந்த சட்ட ஏடுகளைப் படிக்கும்போது, சில ஆண்டுகளுக்கு முன்பு இதே சிறையில், என்னோடு மும்முனைப் போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறைமேற்கொண்ட மதி கொண்டு வந்திருந்த சட்ட புத்தகங்களைப் படித்து, அவைகளில் உள்ளவைகள்பற்றி அவருடன் உரையாடிக்கொண்டிருந்த நினைவு வந்தது. இப்போது ஒரே சிறையில், மதி வேறோர் பக்கத்தில், நான் மற்றோர் பக்கத்தில்! வேறு பக்கத்தில் உள்ள நண்பர்களின் நிலைபற்றித் தெரிந்துகொள்ள, உட்புறமிருந்து உணவு கொண்டுவரும் 'கைதி'களிடம் பேசிப் பார்த்தேன். நன்றாகத்தான் இருக்கிறார்கள்; அவர்களும் உங்களோடு இந்தப் பகுதியில் இருக்க விரும்புகிறார்கள் என்று கூறினார்கள். பாவம்! பிடிபட்டு அடைபட்டுக் கிடப்பவனுக்கு நம்மாலான உதவியைச் செய்ய வேண்டும் என்ற ஆவல் அவர்களுக்கு. கீரை வேண்டுமா என்பார்கள்—

துவையல் வேண்டுமா என்பார்கள்—கொண்டு வந்தும் கொடுப்பார்கள்—கீரை வெந்திருக்காது—துவையலில் மண்ணும் கல்லும் கலந்திருக்கும், ஆனால் அவற்றிலே ஒருவிதமான அன்பு மணம் கமழ்ந்திருந்ததைக் கண்டேன்.

வழக்கு முடிவுபெற்று, தண்டனை இன்னது என்று அறிவிக்கப்பட்டதும், உள்ளே கொண்டுபோவார்கள்; நண்பர்களுடன் சேர்ந்து இருக்கலாம் என்று கூறுகிறார்கள், சிறைப் பணியாளர்கள் — அந்தப் பேச்சும், மிக மெல்லிய குரலில்; சுற்றுமுற்றும் நோட்டமிட்டபடி; அவ்வளவு பயம், எங்கே அதிகாரிகளின் பார்வையிலே சிக்கிக்கொள்கிறோமோ என்று.

வழக்குமன்றத்திலே தருவதற்கான அறிக்கையில், சிறை நிலைமைகள் பற்றியும், அச்சத்தால் பீடிக்கப்பட்ட நிலையில் இங்கு உள்ளவர்கள் கிடப்பதுபற்றியும் குறிப்பிடலாமா என்றுகூடத் தோன்றிற்று. பிறகு யோசித்ததில், அதிலே எந்தவிதமான பலனும் ஏற்படப்போவதில்லை என்பது புரிந்தது.

பல வழக்குகளைப்பற்றிய விவரங்களையும் — அந்த வழக்குகளில் காணப்பட்ட சட்ட நுணுக்கங்கள் பற்றியும் படித்தேன் — ஒரு புதிய உலகமே என் கண்முன் தோன்றுவதுபோல இருந்தது. சர்க்காருடைய செல்லப் பிள்ளைகளாக வேண்டும் என்ற சபலமோ, சர்க்காருக்குப் பரிந்து பேசி தயவுபெற்று, ஆதாயம் அடைய வேண்டும் என்ற அற்பத்தனமான ஆசைகளோ கொள்ளாத சில நீதிபதிகள், சிக்கல்மிக்க வழக்குகளில் சட்டத்துக்கே புதுப்பொருள் கண்டறிந்து கூறி, குற்றவாளிகள் என்று கூண்டில் நிறுத்தப்பட்டவர்களைத் தைரியமாக விடுதலை செய்த சம்பவங்களைப்பற்றிப் படித்தபோது, எழுச்சி மயமாகிப்போனேன். ஒரு குறிப்பிட்ட நடவடிக்கையை, குற்றம் — தண்டிக்கத்தக்கது என்று சட்டம் கூறலாம்—ஆனால், அந்த நடவடிக்கையிலே ஈடுபட்டவன், எந்தச் சூழ்நிலை காரணமாக, எந்த நிர்ப்பந்தத்தினால், என்ன நோக்கத்துடன், அந்த நடவடிக்கையிலே ஈடுபட்டான் என்பதுபற்றி ஆராய்ந்து பார்த்து பிறகே, அந்த சட்டத்தைப் பயன்படுத்த வேண்டும் என்ற கருத்தை, துணிவுடன் சில நீதிபதிகள் எடுத்துக் கூறிஇருந்தனர். இவைபற்றி எல்லாம் படிக்க ஆரம்பித்து அறிக்கை எழுதவேண்டிய நிலையை மறந்து, குறிப்புகள் எடுக்கவும், மேற்கொண்டு என்னென்ன புத்தகங்கள் இதுபற்றிப் படிக்கலாம் என்பது பற்றிய தகவல் திரட்டவுமான பணியில் ஈடுபட்டேன். என்னென்ன புத்தகங்களைப் படிக்க வேண்டும் என்று குறித்திருக்கிறேனோ அவைகளை சிறையிலோ வெளியிலோ, படித்தாக வேண்டும் என்ற ஆர்வம் மிகுதியாகிவிட்டது. அறிக்கையை நான் விரும்பிய அளவுக்கு தயாரிக்க முடியவில்லை என்ற போதிலும், அதன் தொடர்பாக பல புத்தகங்களைப் படித்ததிலே மிக்க மகிழ்ச்சி பெற்றேன். உண்மையையும் சொல்லிவிடுகிறேன் தம்பி! நீண்ட அறிக்கை எழுதுவதற்கு ஏற்ற நிலையும் இல்லை — இடது கரத்திலே இருந்துவரும் வலி, மெல்ல மெல்ல வலது கரத்திலும் படை எடுக்கத் தொடங்கிவிட்டது. வலது கரமும் பாதிக்கப்பட்டுப் போய்விடுமானால், எதையும் எழுத முடியாது. இந்தக் கவலையைச் சுமந்துகொண்டே படுக்கச் சென்றேன்.

தனியாக அடைபட்டுக்கிடப்பவன் என்று கூறினேனே தம்பி! அது முழு உண்மை அல்ல!!—எனக்குத் துணையாக சுறுசுறுப்பான எத்தனை எத்தனை மூட்டைப் பூச்சிகள், கொசுக்கள்!!

■

டில்லியிலிருந்து திரும்பிய பாராளுமன்ற உறுப்பினர்கள் மனோகரனும், ராஜாராமும், பாராளுமன்றத்திலே எழுப்பப்பட்ட மொழிப் பிரச்சினைபற்றியும், பண்டித ஜவஹர்லால் நேருவிடம் பேசியது பற்றியும் கூறினார்கள். இன்று காலையில், மதி, பொன்னுவேல், பார்த்தசாரதி, சுந்தரம், வெங்கா ஆகிய தோழர்கள், நான் இருக்கும் பகுதி வழியாக, ஊசி, போட்டுக்கொள்வதற்காக அழைத்து வரப்பட்டார்கள். பார்க்கமுடிந்தது. என்ன? என்ன? என்ற என் கேள்விக்கு, கரத்தைக் காட்டினார்கள், ஊசி போட்டுக்கொண்டதைக் குறிப்பிட. வார்டர், வேகமாக அவர்களை உள்ளே அழைத்துக் கொண்டுபோய்விட்டார்.

ஐந்தாம் தேதி வழக்கு விசாரணை அல்லவா—12-மணிக்குமேல் துவங்கிற்று. நண்பர்கள் அனைவரும் வந்திருந்தனர் — சிறிதளவு அவர்களுடன் அளவளாவ முடிந்தது. எந்தச் சாட்சிகளையும் குறுக்கு விசாரணை செய்யாததால், ஒரே நாளில் எல்லா சாட்சிகளையும்

அண்ணாவின்
கருத்தோவியங்கள்

பாவையின் பயணம் ரூ. 1-50
அரசாண்ட ஆண்டி ரூ. 1-50
மதுரைக்கு டிக்கெட் இல்லை ரூ. 2-00

கிடைக்குமிடம்:
பரிமளம் பதிப்பகம்
சின்ன காஞ்சிபுரம்.

விசாரிக்கும் கட்டம்முடிந்துவிட்டது. பிற்பகல் 2-லிருந்து மூன்றுவரை, வழக்கு மன்றம் ஒத்திவைக்கப்பட்டிருந்த தால், ஐவருக்கும், நண்பர்கள் அங்கேயே சாப்பாடு கொண்டுவந்தார்கள். மீண்டும் 3-மணிக்கு வழக்கு தொடர்ந்தது—எல்லா சாட்சிகளும் முடிகிறவரையில் நடைபெற்றது. பத்திரிகையில் பார்த்துக்கொள்வாய் என்பதால் விவரம் எழுதவில்லை. 7-ந்தேதி, நான் வழக்கு மன்றத்தில், என் நிலையை விளக்கி ஒரு அறிக்கை தர இருக்கிறேன். அநேகமாக 12-ந்தேதி தீர்ப்பு அளிக்கப் படலாம் என்று தெரிகிறது. இன்று வழக்குமன்றத் துக்கு இரண்டு வாரம் சிறையிலிருந்துவிட்டு மதுரை முத்து வந்திருந்தார். மிக உற்சாகமாகவே காணப்பட் டார். திண்டிவனம் தோழர் தங்கவேலு எம். எல். ஏ, அன்பழகன் எம். எல். சி, மனோகரன் எம். பி. ஆகி யோரும்வந்திருந்தனர். சத்தியவாணியும், மவுன்ட்ரோடு குப்பம்மா அவர்களும் வந்திருந்தனர்.

7-ந்தேதி காலையில் என் நண்பர் வழக்கறிஞர் நாராயணசாமி சிறையில் என்னைச் சந்தித்து, அந்த அறிக்கைபற்றிக் கலந்துபேசுவது என்றும், 7-ந்தேதி பிற்பகல் 2-30-மணிக்கு வழக்குமன்றம் கூடும்போது அறிக்கையை ஒப்படைப்பது என்றும் ஏற்பாடுசெய்து கொண்டிருக்கிறோம். நாளையத்தினம் நண்பர் நடராசன், என்னைக் காணவரக்கூடும் என்று எண்ணுகிறேன். இன்று வழக்கு மன்றத்தில், கே. ஆர். ராமசாமி, சோகமே உருவாக வந்திருக்கக்கண்டேன். எனக்கு ஒரு சங்கடம் என்றால் மிகவும் சஞ்சலப்படும் சுபாவம் ராமசாமிக்கு — அத்தனை பாசம். இத்தகைய தோழர் களின் அன்பினைப் பெற்றிருப்பதை ஒரு பேறு என்றே நான் கருதுகிறேன். உடல்நலக்குறைவாக இருந்த அப் துல்சமத் அவர்களும் இன்று வழக்குமன்றம் வந்திருந் தார் அ. பொ. அரசு. அவர்தான் ஓடோடிச் சென்று, உணவுக்கான ஏற்பாடுகளைக் கவனித்தார்.

நண்பர்களுக்கு ஒரு எண்ணம்—இயற்கையானது தான்—அண்ணனை எப்படியும் தண்டித்துவிடப்போகி றார்கள்—நல்ல சாப்பாடு எங்கே கிடைக்கப்போகிறது —இப்போதாவது சாப்பிடட்டும் என்ற எண்ணம். எதை எதையோ கொண்டுவந்து, எதிரில் குவித்தார் அரசு. பக்கத்தில் இருந்தவர்கள், பண்டங்களின் தரம், சுவை, பக்குவம் இவைபற்றி விளக்கிக்கொண்டிருந் தார்கள். நானோ அவர்கள் காட்டிய அன்புத்தேனை உண்டு மயங்கிக்கிடந்தேன்.

வழக்குமன்ற நிகழ்ச்சிகளை இதழ்களிலே காண் பாய் என்பதால், அங்கு நடைபெற்றவைபற்றி அதிக மாக எழுதாதுவிடுகிறேன்.

தம்பி! இன்றிரவு வலி வலதுகரத்தைத் தாக்கிவிட் டது. இனியும் இங்கே இருப்பது, சரியல்ல என்பதைக் கண்டிப்பாக, சிறை மேலதிகாரிக்குக்கூறி, மருத்துவ மனை சென்றாகவேண்டும் என்ற எண்ணம் உறுதியாக ஏற்பட்டுவிட்டது. மருத்துவமனையில் இருந்தபடி, வழக்கு மன்றம் செல்லலாம் என்று தோன்றுகிறது. நாளை என்ன நடக்கிறதோ, பார்த்துவிட்டுக் கூறுகிறேன்.

அண்ணன்,



நிலைமையை விளக்கிடுவீர்

அட்டையில் காண்கிறீர்கள், இரண்டு காங்கிரஸ் தலைவர்களை — பிரமுகர்களை. கற்பனைத் தலைவர்கள்-உண்மையில் யாரை யும் குறிப்பிடுவதல்ல.

இவர்களின் நிலைமையை, உணருகிறீர் களா?

ஏன் இவ்விதம் இருவரும் உள்ளனர்?

எதை எண்ணிக்கொண்டு இவ்விதம் உள்ளனர்?

இதுபற்றிய உங்கள் கற்பனையை பயனுள்ள முறையில் எழுதி அனுப்பக் கேட்டுக்கொள்கிறேன் — அடுத்த இதழ் வெளிவருவதற்குள்.

பயனுள்ள 'கருத்துரைகள்' வெளி யிடப்படும்.

கருத்துரை, 'காஞ்சி' இதழில் அரைப் பக்க அளவுக்கு மேற்படாமல் இருக்க வேண்டும்.

கவிதை வடிவிலும் இருக்கலாம்.

உங்கள் கருத்துரையைக் காண ஆவலுடன் இருக்கிறேன். விரைந்து அனுப்பிடுக.

அன்பன்,
அண்ணாதுரை.

சேலம் சிதைகிறது!

சென்ற இதழ் தொடர்ச்சி...

ஆனல் கனம் சஞ்சீவி ரெட்டியாரோ, அவற்றுக்குச் சரியான பதில் தந்ததாகத் தெரியவில்லை. "விசாகபட்டினம், ஹாஸ்பேட் சேலம் ஆகிய மூன்று திட்டங்களையும் பரிசீலித்து, எது மிக இலாபகரமாகப் படுகிறதோ அதை மேற்கொள்வோம்'' என்று அவர் தெரிவித்துள்ளார். அவர் இவ்வாறு பேசியது சேலத்தில் — ஆகஸ்டு 2-ஆம் தேதி.

ஆகஸ்டு 9-ஆம் தேதி ஐதராபாத்தில் இரும்பு மந்திரி சஞ்சீவி ரெட்டியார் அவர்கள் பேசும்பொழுது;

"தெற்கில் இரும்பு தொழிற்சாலையை ஏற்படுத்த நெய்வேலி—சேலம், பலிதெல்லா—விசாகை, கோவா — ஹாஸ்பேட் ஆகிய மூன்று இடங்கள்தாம் சிறந்த இடங்கள். இவற்றுக்குள் எது சிறந்தது என்பதை நாம் தேர்ந்தெடுக்க வேண்டும். தெற்கு மாநிலங்களுக்குள் இருக்கும் ஒற்றுமையைக் குலைக்க நாம் எதுவும் செய்யக்கூடாது. சென்னை, ஆந்திரா, மைசூர் ஆகிய மூன்று மாநிலங்களின் முதன் மந்திரிகளும் கூடி, எது சிறந்த இடம் என்று முடிவு செய்யட்டும். அவர்களின் முடிவை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்கிறேன்.''

சஞ்சீவி ரெட்டியார் இவ்வாறு கூறுவது விஷமத்தனமானது, வீண் சச்சரவுகளையும் ஐயப்பாடுகளையும் உண்டாக்கவல்லது!

சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை ஏற்படுத்துவதை மற்ற இடங்களுடன் ஏன் பிணைத்துப் பார்க்க வேண்டும் என்று தெரியவில்லை.

பாராளுமன்றத்தில், "சேலத்தில் இரும்புத் தொழிற்சாலையை உண்டாக்குவதற்கு எந்த அளவு ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருக்கின்றன?'' என்று நானும் தோழர் தர்மலிங்கம் அவர்களும் மற்றும் பலரும் கேட்ட கேள்விக்கு, இரும்பு மந்திரி கனம் சஞ்சீவி ரெட்டியார் பதில் தரும்பொழுது "நிபுணர் குழு தந்த அறிக்கை பரிசீலனையில் இருக்கிறது'' என்று கூறினர்.

சஞ்சீவி ரெட்டி அவர்கள் மத்திய மந்திரி ஆகி, பாராளுமன்றத்தில் அன்றைக்குத்தான் முதல் தடவையாகப் பதில் தருகிருர்.

செழியன்

துணைக் கேள்விகளை நான் போடும்பொழுது,

"நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் உள்ள இலட்சிய அளவைப் பூர்த்தி செய்ய 40 லட்சம் டன் அளவு இன்னும் தேவைப்படுமே! அப்படியிருக்க 5 லட்சம் டன் அளவில் உள்ள சேலம் திட்டத்தை மேற்கொள்வதில் என்ன தடை இருக்கிறது?''

என்று கேட்டேன், ஆராய்ந்து பார்ப்பதாக மந்திரி பதில் தந்தார்.

"சாதகமான முறையில் தஸ்தூர் கம்பெனி அறிக்கை வந்தும், காலதாமதம் ஆவதற்குக் காரணம் என்ன?''

என்று மீண்டும் நான் கேட்டேன்.

"தஸ்தூர் கம்பெனியின் அறிக்கையைப் பரிசீலித்து வருகிறோம்!'' என்று இரும்பு மந்திரி தெரிவித்தார்.

"தென் மாநில முதன் மந்திரிகள் கூடி ஒரு முடிவு தெரிவித்தால் அதன்படி நடக்கத் தயாராக இருப்பதாக ஐதராபாத்தில் தாங்கள் தெரிவித்திருக்கிறீர்களே! இரும்புத் தொழிற்சாலையை நிறுவும் முடிவு, நிபுணர் குழுவின் சிபாரிசுகளை ஒட்டி எடுக்கப்படுமா, அல்லது முதன் மந்திரிகளின் பேரம் பேசும் திறமையைப் பொறுத்து இருக்கிறதா?''

என்று நான் கேட்டேன். "சச்சரவு வரக்கூடாது என்பதற்காக அப்படிச் சொன்னேன், நிபுணர்களின் சிபாரிசுகளின் பேரில்தான் முடிவு எடுக்கப்படும்'' என்ருர்.

அதற்குமேல் நான் தொடர்ந்து துணைக் கேள்விகள் கேட்க முடியாததால் மற்றவர்களிடம் கேள்வி கேட்கும் வாய்ப்பு சென்றது. ஒரு சிலர், ஹாஸ்பேட், விசாகபட்டினம் ஆகியவற்றைப் பற்றியும், கேட்டார்கள் எல்லாவற்றையும் சீர்தூக்கிப் பார்த்து, எது இலாபகரமானதாக இருக்கிறதோ அந்த இடத்தில் தொழிற்சாலையைக் கட்டும் முடிவு எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

சேலம் இரும்புத் தொழிற்சாலை பற்றி கேட்கிற நேரத்தில், ஹாஸ்பேட், விசாகப்பட்டினம் ஆகியவற்றை இழுத்து, சஞ்சீவி ரெட்டியார் வீண் குழப்பம் விளைவிக்கிருர்.

பாராளுமன்றத்தில், உள்ள உறுப்பினர்களும் மந்திரிகளும் தனித்தனியாகக் கூடும் ஆலோசனைக் குழுக்கள் இருக்கின்றன. அதில் இரும்புத் துறை பற்றிய ஆலோசனைக் குழுவில், நான் கேட்டுக்கொண்ட

தற்கிணங்க, சேலம் இரும்புத் தொழிற்சாலை பற்றிய விவாதம் வந்தது. அதிலும், சேலம் இரும்புத் தொழிற்சாலை பற்றிய முடிவை மற்ற தொழிற்சாலை யோசனைகளுடன் பிணைத்துப் பார்ப்பது தவறு என்பதை விளக்கிக் காட்டினேன்.

சேலம், ஹாஸ்பேட், விசாகப் பட்டினம் என்று மூன்று இடங்களையும் ஒரு சேர காட்டி, எது சிறந்த இடம் என்று பார்க்கிறோம் என்று அறிவிக்கும் பொழுது, தமிழ்நாடு, ஆந்திரம், மைசூர் ஆகிய மூன்று மாநிலத்தவர்களிடையேயும் வீண் சச்சரவையும் போட்டியையும் சஞ்சீவி ரெட்டியார் உண்டாக்குகிருர். ஒன்றுக் கொன்று போட்டி இல்லை!

சேலத்தில் ஒரு இரும்புத் தொழிற்சாலை அமையலாம், அதேபோல் ஹாஸ்பேட்டிலும், விசாகப் பட்டினத்திலும் இரும்புத் தொழிற்சாலைகள் வருவதில் எதுவும் தடை இல்லை!

இப்பொழுதுள்ள நிலைமையைப் பார்த்தால், பொதுத் துறையிலுள்ள பிலாய், துர்காபூர், ரூர்கேலா, ஆகியவைகளும் தனியார் துறையிலுள்ள டாடா கம்பெனி, இந்தியன் ஐரன் அண்டு ஸ்டில் கம்பெனி, பத்ராவதி கம்பெனி, ஆகியவைகளும் சேர்த்துப் பார்த்தால்—எல்லாம் விரிவுபடுத்தப்படும் நிலையிலும்—மொத்தம் 1 கோடி 2 லட்சம் டன் அளவு எஃகு உற்பத்தி செய்ய முடியும். நான்காவது திட்டத்தில் பொகாரோ இரும்புத் தொழிற்சாலையையும் சேர்த்துக் கொண்டால், மொத்த எஃகு உற்பத்தி அளவு 1 கோடி 32 லட்சம் டன் அளவு உயரக்கூடும்.

திட்டக்குழுவின்படி நாலாவது திட்டத்தில் எட்டிப்பிடிக்க வேண்டிய அளவு 1-கோடி 73-லட்சம் டன்!

ஆக பொகாரோ எஃகுத் தொழிற்சாலை உண்டாகி வளர்ந்த பின்னும், 40-லட்சம் டன் துண்டு விழுகிறது!

40-லட்சம் டன் எஃகு உற்பத்தி செய்ய ஏதாவது வழி செய்தாக வேண்டும். இதற்கு சேலத்தில் 5-லட்சம் டன் அளவு உள்ள தொழிற்சாலையை ஆரம்பிக்கலாம் என்று நிபுணர்குழு கூறுகிறது. இந்த 5-லட்சம் டன் அளவு ஆரம்பமாக உள்ளது. பிறகு அதை விரிவுபடுத்திக் கொள்ளலாம்.

தற்பொழுதுள்ள அறிகுறிகள் படி, ஹாஸ்பேட், விசாகப்பட்டினம் ஆகிய இடங்களில் தனித்தனி 10-லட்சம் டன் அளவுள்ள இருதொழிற்சாலைகளை அமைக்க யோசனை இருக்கிறது.

40-லட்சம் டன் அளவுக்குத் துண்டு விழுகிறபொழுது, சேலம், ஹாஸ்பேட், விசாகபட்டினம் ஆகிய மூன்று இடங்களிலும் இரும்புத் தொழிற்சாலைகள் வர இடமிருக்கிறது! எனவே சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை அமைப்பது மற்ற இரு இடங்களையும் பாதிக்காது, மூன்றையும் பிணைத்துப் பார்க்க வேண்டிய அவசியமும் இல்லை!

சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை அமைப்பதற்கான முன்வேலைகள் ஒருவாறு நடந்தேறிவிட்டன. தொழிற்சாலைக்கான விரிவான திட்டத்தைத் தஸ்தூர் கம்பெனி தந்துவிட்டார்கள். இவற்றுக்கு நான்கு ஆண்டுகள் பிடித்தன. 1964-பிப்ரவரியில் தஸ்தூர்கம்பெனி அறிக்கை கிடைக்குமென எதிர்பார்க்கப்பட்டது. ஆனல் 1964 ஆகஸ்டு மாதத்தில்தான் அது கிடைத்தது. மற்ற இரு இடங்களான ஹாஸ்பேட்டிலும் விசாகப்பட்டினத்திலும், தொழிற்சாலைகளை அமைப்பதற்கான பூர்வாங்க, ஆராய்ச்சிகள் இன்னும் ஆரம்பமாகவில்லை. இப்பொழுது துவங்கினாலும், சேலம் தொழிற்சாலைக்கு உள்ளதைப்போன்று ஒரு விரிவான அறிக்கை தயார் செய்ய நான்கு அல்லது ஐந்து ஆண்டுகள் பிடிக்கும்! அவ்வளவு காலம்வரை, சேலம் தொழிற்சாலை திட்டத்தை ஒத்திப்போடவேண்டிய அவசியமில்லை.

தஸ்தூர் கம்பெனி தந்துள்ள அறிக்கையின் முடிவுகளைப் பார்க்கிற பொழுது, சேலம் இரும்புத் தொழிற்சாலை சிக்கனமானது, இலாபகரமானது என்று தெரிகிறது.

சேலம் இரும்புத்தொழிற்சாலைக்கு தேவைப்படக் கூடிய முதலீடு 93-கோடி ரூபாய்!

இரும்புத் தொழிற்சாலைகளை அமைக்கும் பொழுது பெரிய முட்டுக்கட்டையாக இருப்பது வெளி நாட்டுச் செலாவணி! வடநாட்டில் உண்டான பெரிய இரும்புத் தொழிற்சாலைகளுக்கெல்லாம் முதலீட்டில் 45-சதவிதம் வெளிநாட்டுச் செலாவணி தேவைப்பட்டது. சேலம் இரும்புத் தொழிற்சாலைக்கு 35-சதவிதம் வெளி நாட்டுச் செலாவணி இருந்தால் போதும், என்று கூறப்படுகிறது.

இரும்புத் தொழிற்சாலைகளை உண்டாக்குகிற பொழுது, கனிப் பொருள்களும் எரி பொருள்களும் மற்றவைகளும் கிடைக்கக்கூடிய இடங்களுக்கு அருகாமையில் தொழிற்சாலை அமைக்கப்பட்டால், கனிப்பொருள்களைக் கொண்டு வரும் செலவு குறையும். இரும்புக் கனி கிடைக்கும் இடத்திற்கு அருகில் ஒரு தொழிற்சாலை அமைந்தால் நிலக்கரி 500 மைல்களுக்கு அப்பாலிருந்து வரவேண்டியிருக்கலாம், இரண்டுக்கும் மத்தியில் அமைந்தால் சுண்ணும்புக்கல் கிடைக்குமிடம் 700 மைல்களுக்கு அப்பால் இருக்கலாம். ஆக கனிப் பொருள்களைக் கொண்டு வரும் செலவு அதிகமாகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

இந்தியா முழுவதையும் எடுத்துக் கொண்டால், இப்பொழுதுள்ள பிலாய், துர்காபூர், ரூர்கோலா, டாடா, ஆகியவற்றைவிட, இனி மேல் வரவிருக்கிற பொகாரோ, திட்டத்தைவிட, கோவா, ஹாஸ்பேட், விசாகப்பட்டினம் ஆகியவற்றை விட, சேலம் இரும்புத் தொழிற்சாலை தான் கனிப் பொருள்களைத் திரட்டுவதில் மிகச் சிக்கனமானது.

இரும்பு எஃகுத் தொழிலுக்குத் தேவையான எல்லா பொருள்களையும் கொண்டுவந்து சேர்க்கவேண்டிய போக்குவரத்து தூரம், ஒவ்வொரு தொழிற்சாலைக்கும் எவ்வளவு என்று கீழே தரப்படுகிறது.

திட்டம்	கனிப்பொருள் போக்குவரத்து தூரம்	
சேலம்	159	மைல்
பிலாய்	1,617	,,
துர்காபூர்	881	,,
ரூர்கேலா	880	,,
டாடா கம்பெனி	592	,,
பொகாரோ	842	,,
கோவா	4,216	,,
ஹாஸ்பேட்	3,298	,,
விசாகப்பட்டினம்	3,090	,,

மற்றெல்லா திட்டங்களையும்விட, சேலம் இரும்புத் தொழிற்சாலைக்கு, தேவையான பொருள்கள் அருகா

மையில் இருக்கின்றன. இதனல் போக்குவரத்துச் செலவும், உற்பத் திச் செலவும் குறையும்!

சேலம் தொழிற்சாலைக்கு 93 கோடி ரூபாய் தேவை என்று கூறும்பொழுது, அது அதிகமானது என்று யாரும் கூறமுடியாது.

போடப்படும் மூலதனத்துக்கும் உற்பத்தி செய்யக்கூடிய அளவுக் கும் பொருத்தம் பார்க்கும்பொழுது இந்தியாவிலேயே சேலம் திட்டம் தான் சிக்கனமானது. ஒரு டன் உற்பத்தி அளவுக்கு முதலீடு எவ் வளவு தேவை என்று பார்த்தால்:

திட்டம்	1 டன் உற்பத்திக்கு முதலீடு
சேலம்	ரூ. 2,090
பிலாய்	2,208
துர்காபூர்	2,270
ரூர்கேலா	2,475

ஆக முதலீடு செய்வதைப் பார்த்தாலும், சேலம் திட்டத் திற்கு குறைந்த வீத முதலீடு தான் தேவைப்படுகிறது!

சேலம் திட்டத்தைப் பற்றிக் கூறப்படுகிற ஒரே ஒரு குறை, சேலம் கனிகளில் 100-க்கு 35 அல் லது 40 பங்குதான் இரும்பு இருக் கிறது என்பது. மற்ற இடங்களில் 100-க்கு 60, 70 பங்கு இரும்பு இருப் பது உண்மைதான். இந்தக் குறை பாடு பற்றியும் தஸ்தூர் கம்பெனி ஆராய்ந்திருக்கிறுர்கள். மற்ற இடங் களில் கிடைக்கும் இரும்புக் கனிக ளில் கந்தகம் — பாஸ்பரஸ் ஆகி யவை அதிகமாகக் கலந்திருக்கின் றனவாம். சேலம் இரும்புக் கனிக ளில் கந்தகம்—பாஸ்பரஸ் மிக மிகக் குறைந்த அளவு—இல்லை என்று கூறுகிற அளவுகூட இருக்கிறது! இரும்புக் கனியிலிருக்கும் கந்தகத் தையும் பாஸ்பரசையும் பிரிக்கிற செலவு சேலத்தில் மிகக் குறைந்து விடுகிறது. எனவே தரம் குறைந் தது என்றாலும், மற்ற உலோகக் கலப்புகள் குறைந்திருப்பதால், செலவு குறைவாகவே இருக்கும் என்று கூறப்படுகிறது.

தஸ்தூர் கம்பெனி அறிக்கைப் படி சேலம் இரும்புத் தொழிற் சாலைக்கு,

குறைந்த முதலீடு,

குறைந்த வெளிநாட்டுச் செலாவணி.

குறைந்த போக்குவரத்துச் செலவு,

தூய்மையான கனிவளம்,
இவ்வளவும் இருக்கின்றன.

இவ்வளவுடன், சஞ்சீவி ரெட்டி யாரின் குறைந்த அக்கறையும் இருக்கிறது!

பாராளுமன்றத்தில் கேள்வி கேட் கப்பட்ட பொழுதும், ஆலோசனைக் குழுவில் விவாதிக்கப்பட்ட பொழு தும், திட்ட வட்டமாக பதில் தர சஞ்சீவி ரெட்டியார் மறுக்கிறுர். சேலம்திட்டத்தைஹாஸ்பேட், விசா கப்பட்டினம் திட்டங்களுடன் பிணைத்துப்போட்டே விவாதிக்கிறுர். சேலம் திட்டத்தைவிட மற்ற திட் டங்கள் சிறந்தவை என்று நினைவில் வைத்து, சேலம் திட்டத்தைத் தள் ளிப்போட முயல்கிறுரோ என்று ஐயுற இடமிருக்கிறது.

ஆங்கில — அமெரிக்க இரும்புக் குழுவின் பார்வைக்கு சேலம் திட் டத்தை வைத்திருப்பதாக சஞ்சீவி ரெட்டியார் கூறுகிறுர். யாராவது முன்வந்து சேலம் திட்டத்தை ஏற் றுக்கொண்டால் நல்லது என்று தமது பொறுப்பை மறந்து சஞ்சீவி ரெட்டியார் கூறுகிறுர். மந்திரியாக இருக்கிறவர் அக்கறை காட்டவில்லை யென்றுல், வெளிநாட்டிலிருந்து வரு கிறவர்கள் எப்படி அக்கறை காட்டி தொழிற்சாலையை ஆரம்பிக்கப் போகிறுர்கள்?

"நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது சேலம் திட் டத்திற்கு இடம் தரப்படுமா?" என்று கேட்டால், "அப்படி யொன்றும் என்னுல் உறுதி யாகக் கூறமுடியாது!" என்று சஞ்சீவி ரெட்டியார் கூறுகிறுர்.

கனிவள ஆராய்ச்சி நடை பெற்று, தொழில் நுணுக்க ஆராய்ச்சி முடிந்து, தொழிற் சாலையை அமைப்பதற்கான விரிவான அறிக்கை நிபுணர் குழுவிடமிருந்துஅரசாங்கத்துக் குக் கிடைத்த பிறகும், அர சாங்கம் ஒத்திப்போடுவதில் அர்த்தமேயில்லை! இதைவிட, "அந்தத் திட்டம் இல்லை!" என்று வெளிப்படையாக கூறி விடலாம்!

புதிய இரும்பு மந்திரி சஞ்சீவி ரெட்டியாரின் போக்கு தமிழகத்தில் உள்ள பல்வேறு கட்சியினர்க்கும் அதிர்ச்சியைத் தந்துள்ளது. வெண் ணெய் திரளுகிறநேரத்தில் தாழியை உடைப்பதுபோல, கடைசியாக நிபு ணர்முழுவின் சாதகமான அறிக்கை வந்தபின், ஒத்திப்போடும் முயற்சி இருக்கிறது.

நாமக்கல் தொகுதி பாராளுமன்ற உறுப்பினரும் காங்கிரஸ்காரருமான தோழர் வி. கே. இராமசாமி அவர் கள், "சேலம் இரும்புத் தொழிற் சாலைத் திட்டம் எடுத்துக்கொள்ளப் படவில்லை என்றுல், நான் எனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினமா செய்துவிடுகிறேன்!" என்று பத்திரிகைகளில் அறிக்கை விடுத்துள்ளார். அநீதி இழைக்கப் படுவது கண்டு, உள்ளங்குமுறி, அவர் வெளியிட்டுள்ள உணர்ச்சி வரவேற்கத்தக்கதே.

"சேலம் திட்டம் எடுத்துக்கொள் ளப்படவில்லை என்றுல். நான் இராஜி னுமா செய்வேன்!" என்று நாமக் கல் உறுப்பினர் இராமசாமி தெரி விக்கிறுர். ஆனல் அதே சமயம் தமிழ் நாட்டிலிருந்து பாராளுமன்றத் திற்கு வந்துள்ள ஒரு சில காங்கிரஸ் உறுப்பினர்கள் வெளிப்படையா கவே, "சேலம் திட்டம் உபயோக மற்றது, வீணனது, பலன்தராதது, அதற்காக வாதாடுவது பிரயோசன மற்றது!" என்றும் கூறுகிறுர்கள். தமிழ்நாட்டிலிருந்து காங்கிரசுப் பிரதி நிதிகளாக வந்துள்ள இவர்களே இப்படிச் சொன்னுல், அந்தத் திட் டத்தை எதிர்ப்பவர்களைப்பற்றி நாம் என்ன சொல்லமுடியும்?

சேலம் இரும்புத் தொழிற்சாலைத் திட்டம், ஆராய்ச்சிப்படி, தொழில் துறை ஆதாரங்களின்படி, நிபுணர் களின் அறிக்கைப்படி, சிக்கனமா னது, செலவு குறைவானது, இலாப கரமானது, நாட்டு வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பது! விருப்பு வெறுப்பின்றி பார்த்தால், இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட வேண் டும்! நிறைவேற்றுவோம் என்று கூறி ஒத்திப் போடக்கூடாது, உட னடி செயல்படுத்தும் முயற்சி துவங்கவேண்டும்!

சேலம் திட்டம் கைவிடப்படு மானுல், அது தமிழகத்துக்கு இழைக்கப்படும் நம்பிக்கைத் துரோ கமாகும்!

189
12 11-10-64

அந்திக் கலம்பகம்

என்னடி பட்டு! முகம் வாட்டமாக இருக்கிறது. பொன்னியைக் கண்ட பிறகுகூட மௌனமாக இருக்கிறாயே...

மௌன விரதமோ என்னமோ! ஏன் பட்டு! வினோபா இனிப் பேசப் போவதே இல்லை என்று விரதம் பூண்டுவிட்டாராமே, அதைப்பார்த்து நீயும் ஆரம்பித்திருக்கிறாயா...

பொன்னி! எதற்காக அத்தனை பெரியவருடைய பெயரை இதிலே கொண்டுவந்து சேர்க்கிறாய்...நான் மௌன விரதமும் இருக்கவில்லை, உண்ணாவிரதமும் மேற்கொள்ள வில்லை...

இரு! இரு! இன்னும் சில நாளில் நமது மந்திரிகளே சொல்லப் போகிறார்கள் பார்; வாரத்துக்கு ஒருநாள் உண்ணாவிரதம் இருக்கச்சொல்லி...

ஏனாம்! இருக்கிற ஏகாதசிகள் போதாதென்று, சர்க்கார் வேறு ஒரு உண்ணாவிரதம் இருக்கச் சொல்லப் போகிறார்களா...

காரணத்தோடுதான் பட்டு! உணவுப் பிரச்சினை நெருக்கடியாகி விட்டிருக்கிறதல்லவா, அதைப் போக்க, தகுதியான முறை, உண்ணாவிரதம் என்று மந்திரிகள் பேசப் போகிறார்கள் பாரேன்—காரணம் காட்டி—புள்ளி விவரம் காட்டி...

வயற்றுக்குச் சோறு போட வக்கு இல்லாவிட்டாலும் இந்த மாதிரி வக்கணை பேசத் தெரியுமே அவர்களுக்கு. அடே அப்பா! அதிலே அசகாயச் சூரர்களல்லவா நம்ம மந்திரிகள்...

ஆனாலும், பெரியாருக்கு இருக்கிற துணிச்சல் இந்தமந்திரிகளுக்கு வரவில்லை. இவர்கள் இன்னமும் விலையைக் குறைக்கிறோம், நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறோம் என்று பேசுகிறார்கள். பெரியார்தான் ஓங்கி அடித்திருக்கிறார். ஆமாம்! விலை அப்படித்தான் ஏறும்! ஏறட்டுமே; அதனால் என்ன? குத்துதா குடையுதா! படி அரிசி மூணு ரூபாய்கு வித்தாலும் பாதகமில்லை என்று பேசுகிறார்...

மந்திரிகள் மனம் குளிர்ந்திருக்கும்...இல்லையா...

கேட்கவேண்டுமா...மக்கள்மனம் எப்படி இருக்கும் இந்தப் பேச்சைக் கேட்டால்...

பெரியார் எதைப் பேசினாலும் இப்போதெல்லாம் மக்கள் கவலைப் படுவது இல்லை. பாவம்! நிறைய

உழைத்தவர், வயதாகி விட்டது... என்று எண்ணிக்கொள்கிருர்கள்...

சாஸ்திரிக்குக் கூட அறுபது வயதாமே...

ஆமாம்! அவரும் அந்தக் காலத்தவர்தான், அறுபது வயதுதானும்.

ஆனல், எத்தனை அடக்கம் தெரியுமா! பெரிய, படகு போன்ற மோடார் வேண்டாம்; சின்ன கார் போதும் என்று கூறிவிட்டார், படித்தயா பேப்பர்லே.

படித்தேன்...வேறே ஒருத்தர் மூலமாக இன்னெரு விஷயமும் தெரிந்துகொண்டேன் பட்டு! சாஸ்திரியோட மகன் சென்னைப் பட்டணத்திலே எதோ கம்பெனியிலே பெரிய உத்யோகத்திலே இருக்கிருராம்—அவர் படகு போன்ற மோடாரிலேதான் சவாரி செய்கிருராம்...

அதுக்கு இவர் என்னடி செய்வார், பொன்னி!

வேறே ஒன்றும் செய்யவேண்டாம்; மகனைக் கூப்பிட்டு அப்பா! நான் ஊராருக்கெல்லாம் புத்திமதி சொல்லிக்கொண்டு இருக்கிறேன், ஆடம்பரம் கூடாது என்று; நீயே படகுபோன்ற மோடார்லே போனல் என் பேச்சுக்கு நீயேமதிப்பு கொடுக்கல்லேன்னு, ஊரார் கேலி செய்யமாட்டார்களா—அதனலே, சின்ன கார்லே போயேன் என்று சொல்லலாமே...

அது வாஸ்தவந்தான், பொன்னி! முதல் மந்திரி பக்தவத்சலத்தோட மோடார்கூட பெரிசாமே, படகு போல...

ஆமாம்...ஆனு பட்டு: இதை எல்லாம் சொல்லப் போனு, வீணன பொல்லாப்பு.

நாமாவது பேசிக்கொள்கிறேம் பொன்னி! இதைப் பார்க்கிறவர்கள் என்னென்ன எண்ணிக்கொள்கிருர்களோ, யார் கண்டார்கள். ஆடம்பரம் கூடாது என்று உபதேசம் எல்லோருக்கும் பொதுவானதாக இருந்தால்தானே, நல்லது; மதிப்பு இருக்கும்...

அதைக்கூட நாம சொல்லி எதற்காக, மந்திரிகளோட கோபத்தைக் கிளறிவிடுவது......கண் இருக்கு பார்க்க; புத்தி இருக்குது யோசிக்க; ஓட்டு இருக்குது, வேண்டாதவரை வீட்டுக்கு அனுப்ப...

எவ்வளவு சுலபமான வழியைச் சொல்லிவிட்டா பார்த்தியா, நம்ம பொன்னி! ஏண்டி பொன்னி! மக்களெல்லாம் இந்த முறைப்படியா நடந்துகொண்டு வருகிருர்கள்...

கொடுக்கப்பட்டிருக்கிற ஓட்டு சரியானபடியாக பயன்படவேண்டும். என்ருல், இந்த முறையைத்தான் மக்கள் மேற்கொள்ளவேண்டும்...

எலக்ஷன் வரப்போகுது இன்னும் இரண்டுவருஷம் கழித்த பிறகு...

இரண்டு வருஷம் என்ருல் என்ன? பார்த்துக்கொண்டிருக்கிற போதே உருண்டு ஓடிப்போய்விடாதா...

அதுவும் உண்மைதான், பொன்னி! இப்ப, இங்கிலாந்திலேயும், அமெரிக்காவிலேயும் தேர்தலாமே......

ஆமாம்! பிரசாரம் மும்முரமாக நடக்குதே. ஏமு! அமெரிக்காவிலே, ஒரு பிரசாரபடம் காட்டினுர்களாம்......அதைப்பற்றின விவரத்தைப் படித்தபோது உடம்பே புல்லரித்துப் போகுது.

என்ன அப்படிப்பட்ட பிரசாரம்... சினிமா படமா...

டெலிவிஷன்டி! ஒரு சின்ன பெண் குழந்தை வருதாம். வந்து, தோட்டத்திலே பூத்திருக்கிற ஒரு மலரை எடுத்து. அதனுடைய இதழ்களை, ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து என்று எண்ணிக்கொண்டிருக்கிறதாம், மகிழ்ச்சியோடு. உடனே வேறே ஒரு காட்சி தெரியுதாம். ஒரு பெரிய அதிகாரி தெரிகிருராம் படத்திலே, அவர் எதிரிலே அணுகுண்டு தயாராக வைக்கப்பட்டிருககிறதாம். அந்த அதிகாரி, பத்து, ஒன்பது, எட்டு, ஏழு, ஆறு என்று கீழ்நோக்கி எண்களைச் சொல்கிருராம்...

அதென்ன பொன்னி! தலை கீழ்ப் பாடமா இருக்குதே...

காரணத்தோடுதான்; கேளேன் விவரத்தை, ஆறு, ஐந்து, நாலு, மூணு என்று சொல்லிக்கொண்டிருக்கிருராம் அந்த அதிகாரி. என்ன விஷயம் தெரியுமோ! பத்திலே இருந்து தொடங்கி, மூணு, இரண்டு, ஒண்ணு என்று சொல்லி முடித்ததும, பூஜ்யம் என்று சொல்ல வேண்டுமல்லவா. அதைச் சொன்னதும் அணுகுண்டு வெடிக்கும்...

ஐய்யய்யோ! அதுக்காகத்தானு, தலைகீழ் பாடம்.

ஆமாம்! அதைக்காட்டி, எது வேண்டும் அமெரிக்க மக்களே! உங்கள் சிறுமிகள் உல்லாசமாக பூந்தோட்டத்திலே உலவிக்கொண்டு, மலர்பறித்து மணம்பெற்று இன்பமாக வாழ்வதற்கான அரசு வேண்டுமா? அல்லது அணுகுண்டு வெடித்து எங்கும் அழிவு ஏற்படுத்தும் அரசு வேண்டுமா! சிரித்து விளையாடும் சிறுமியாக உங்கள் மக்கள் இருக்கவேண்டுமானல் ஜான்சனுக்கு ஓட்டுப்போடுங்கள் அழிவுதரும் அணுகுண்டு வெடிக்க வேண்டுமானல் கோல்டுவாடருக்கு ஓட்டுப்போடுங்கள்! என்று படக்காட்சியிலே சொல்லப்படுகிறதாம் ....

பலே! பலே! பிரமாதமாக இருக்குதே பொன்னி! அப்படி அல்லவா, பளிச்சுனு புரியறமாதிரியா இருக்க வேணும் பிரசாரம்......அமெரிக்காவிலே அறிவாளிகள் அதிகம்; அதனுலே பிரசாரம் முதல்தரமாக அமையுது.

ஏமு! இங்கேயும் அறிவுக்குப் பஞ்சம் இல்லை; பணம்கிடையாது, பிரசார யந்திரத்தைக் கட்டிக் காப்பாற்ற......

உன்னோட தீனுமூனு சழகத்தைப் பத்தின நினைப்பு வந்துவிட்டதா...

அதென்ன ஏமு! என்னோட தீனுமூனு கழகம்னு சொல்கிறே...... உனக்கு மட்டும் பிடிக்காதா, கழகம்......

என்னைத்தான் நீ முக்கால் கழகமாக்கிவிட்டயே...

ஏமு! என்னிடம் மட்டும் பணம் இருந்தா, ஒரு பிரசாரபடம் அருமையானதா எடுக்கமுடியும்......பெயர் கூட தயாராக வைத்திருக்கிறேன் ....

அடிசக்கேன்னனும்! பெயரே வைத்தாகிவிட்டதா படத்துக்கு...... என்னடிபேரு? சொல்லு பொன்னி!

ரூபாவதியின் பிரலாபம்! என்பது அந்தப் படத்தோட பெயர்...

ரூபாவதியின் பிரலாபமா? நல்ல தங்கா கதை மாதிரியா...

இல்லை! இல்லை! சொல்லட்டுமா... ரூபாவதி வருகிரு, அழகா, துள்ளி விளையாடிக்கொண்டு பாட்டுப்பாடியபடி......

காதலிலே ஆரம்பமாகி கண்ணீர்லே முடியுதா உன் கதை...

191

என் கதை மட்டுமா......பாதிப் பெண்களோட கதை அப்படித் தானே! ஆனா ஏமு! ரூபாவதி கதை அப்படி அல்ல...இதுவேறு...அரசியல் கதை. ரூபாவதியை முதல் காட்சியிலே பாடி ஆடிய நிலையிலே பார்க்கிறோம். சீவிச் சிங்காரித்துக் கொண்டு பொட்டிட்டுப் பூமுடித்துக் கொண்டு, புதிய சேலை கட்டிக் கொண்டு இருக்கிறா ரூபாவதி...

நல்லா இருக்குதுடி பொன்னி! ஆரம்பம்...

நல்லா இருக்குது ஏமு! நீ கதை கேட்கற இலட்சணம். ரூபாவதி, புதுச்சேலை கட்டிக்கொண்டு வருகிறான்னு பொன்னி சொன்ன உடனே என்ன சேலை, ஜார்ஜட்டா, நைலானா, டெரிலீனா, காஞ்சீபுரம் பட்டுச் சேலையா, என்று கேட்டிருக்க வேண்டாமோ...

பார்டி பொன்னி! பட்டுவோட புத்திபோகிற போக்கை. சேலை என்னது என்று கேட்கணுமாம்.....

ஏமு! பட்டு சொல்றதிலே ஒரு பொருள் இருக்குது. அவ தெரிந்து சொன்னாளோ, சும்மா சொல்லி வைத்தாளோ தெரியாது, என்னோட படத்திலே, ரூபாவதியோட சேலைக்கு ஒரு பொருள் இருக்குது...

அது என்னடிம்மா சேலையிலே ஒரு பொறுத்தம் ஒரு பொருள்..

நூலைப்போல சேலை, தாயைப் போலப் பொண்ணு! ஏண்டி பொன்னி! அதுதானே தத்துவம்.

நினைத்தேன்–பட்டு இப்படித்தான் ஏதாவது ஒரு அபத்தம் சொல்லுவான்னு. ஏமு! பட்டு சொன்ன பழமொழியை விளக்க அல்ல, சேலையிலே ஒரு பொருள் இருக்கிறதாக நான் சொன்னது. ரூபாவதி கட்டிக் கொண்டிருக்கற சேலை, மூவர்ணச் சேலை...

ஓஹோ! அப்படியா! காங்கிரஸ் அரசாங்கத்தை ஞாபகப்படுத்த...

ஆமாம், ஏமு! மூவர்ணச் சேலையைக் கட்டிக்கொண்டு ரூபாவதி ஆடிப் பாடிக்கொண்டு, ஒவ்வொரு தோட்டமா செல்கிறா. முதலிலே பூந்தோட்டம்—இரண்டாவது தோட்டத்திலே பூ இல்லை, செடி மட்டும்; மூன்றாவது தோட்டத்திலே செடி இருக்குது, இலைகள் இல்லை...நாலாவது தோட்டத்திலே செடிகள் குச்சுகளாகிக் கிடக்குது, கொளவிகள் கொட்டுது ரூபாவதியை, இப்படியே பதினேழு தோட்டங்களிலே நுழைந்து நுழைந்து வருகிறா ரூபாவதி. பதினேழாவது தோட்டத்திலே வரும்போது மூவர்ணச்சேலை சாயம் போன நிலை, அங்கங்கே கிழிசல், ஒட்டு, தையல், ரூபாவதி துரும்பு துரும்பா இளைச்சிப் போயிருக்கிறா; முக்காவாசி உடம்புக்கு மேலே தேய்ந்து போய்விட்டிருக்குது; அழறா; பூந்தோட்டத்திலே புகுந்து புள்ளிமானைப்போல துள்ளி விளையாடலாம்னு எண்ணி வந்தேனே; இந்தக் கதியாகிப் போனேனே; என் உடம்பிலே, முக்கால்வாசிக்குமேலே தேய்ந்தே போய்விட்டதே; பழைய ரூபலாவண்யம் இல்லையே என்று அழுதுகொண்டிருக்கிறா...

அதனாலேதான் ரூபாவதியின் பிரலாபம்னு பேரா? காங்கிரஸ் அரசாட்சி காரணமாக, நாடு தேய்ந்து போய்விட்டது என்பது பொருளா...

ஏமு! அது மட்டுந்தான் என்றா, பாரதமாதாவின் பெயரை அல்லவா வைத்திருப்பேன். இது, ரூபாவதி கதையாச்சே...

அதுதானே யோசிக்கிறேன்... ரூபாவதி, யாரு...

ஏன்! அவ உனக்கு நல்லாத் தெரியுமே...

ரூபாவதியா...அந்தப் பெயருள்ளவகூட எனக்குத் தெரியாதே...

பொய்! பொய்! இப்ப, உன்னிடம் இருக்கிறா ரூபாவதி...

என்னடி பொன்னி! விளையாட்டுக் காட்டறே...

விளையாட்டுக் காட்டுகிற வயசா எனக்கு...அல்லது சுபாவமாவது அப்படிப்பட்டதா ...... ஏமு! உன் பையிலே ரூபா இல்லையா, சொல்லு ......

இருக்குது ... ரூபா இருக்குது ... ரூபாதான் ரூபாவதி......

அதேதான்! ஏமு! சுயராஜ்யம் ஆரம்பமானபோது நம்மிடம் இருந்த ரூபா இருக்கே, அது இந்த பதினேழு வருஷ ஆட்சியிலே, கொஞ்சம் கொஞ்சமா தேய்ந்து தேய்ந்து, இப்போது 17 பைசா அளவு மதிப்பு உள்ளதாக ஆகிவிட்டது...

உன்னோட கதையிலே நடக்குதா இது.

பைத்யமே! நாட்டிலே நடந்து இருக்கிறதை நான் கதை ஆக்கி இருக்கிறேன். ரூபாயோட மதிப்பு மங்கி மங்கி, இப்ப, 17 பைசா அளவுதான் ஒரு ரூபாயோட மதிப்பு என்பதாக, பெரிய பொருளாதார நிபுணர் சொல்லி இருக்கிறார்; காங்கிரஸ் அரசாட்சியும் அவர் சொன்னதை மறுக்கவில்லை.

என்னது, என்னது! ஒரு ரூபா, இப்போது கால் ரூபா அளவாகிப் போய்விட்டதாகவா சொல்கிறே...

கால் ரூபாய்க்கும் குறைவு ஏமு! கால் ரூபாய் என்றா 25 பைசான்னு ஆகுதே. இப்ப ரூபாயோட மதிப்பு —17 பைசாதானே...

அப்படியா ஆகிவிட்டது, பணத்தோட கதி...

ஆமாம்! ஆள் முன்னே குண்டு கட்டைபோல இருந்தான், இப்ப பார்த்தா ,துரும்பாகிவிட்டிருக்கிறான் என்று பேசிக்கொள்கிறோமல்லவா —அதுபோல, 17 வருஷத்துக்கு முன்பு 100 பைசா அளவு மதிப்புள்ளதாக இருந்த ரூபா, இப்போது 17 பைசா அளவுக்கு ஆகிவிட்டிருக்குது — தேய்ந்து விட்டிருக்குது— மங்கி விட்டிருக்குது...

அநியாயம்தாண்டி பொன்னி இது! அதனாலேதான், ரூபாவதி புலம்பல்னு கதைக்குப் பேரோ?

ஆமாம் ஏமு! இளைத்துப்போன ரூபாவதி, தன் வீட்டு மக்களைப் பார்த்து அழுதபடி சொல்றா, என்ன கதி ஆகிவிட்டேன் பார்த்திங்களா! என்னை இந்தக்கதிக்கு ஆளாக்கினவர்களை மறுபடியும் ஆட்சியிலே அமர்த்தலாமா? அது தர்மமா? என்று கேட்கிறா......

ரொம்ப அழகா அமைந்திருக்குது பொன்னி! உன்னோட கற்பனைத் திறம் உள்ளபடி அபாரம்...

சும்மா இரு ஏமு! இவளோட கற்பனை இல்லா இது......பல வருஷத்துக்கு முன்பு, ரூபாவதி கதைன்னு, கல்கி எழுதி இருக்கிறார்...

ஆமாம், ஏமு! நான் படம் எடுக்கப் போவதாகச் சொன்னேனே தவிர, கதை யாருடையது என்று சொல்லவில்லையே. கதை கல்கியோட கற்பனைதான். அதுவும் வெள்ளைக்கார ஆட்சியாலே, நம்ம நாட்டு ரூபாயோட மதிப்பு எப்படிக் குறைந்துபோய்விட்டது என்பதை விளக்க எழுதப்பட்ட கதைதான்....

பேஷ்! பேஷ்! அதே கதையை, இப்ப நடக்கற காங்கிரஸ் ஆட்சியோட இலட்சணத்தை விளக்க நீ, பயன்படுத்த நினைக்கறே...

ஆ மா ம்! தப்பா! இப்ப, கல்கி இருந்தா, இதையேதான் சொல்லி இருப்பார்.

ஆமாம் பொன்னி! பணத்தோட மதிப்பையே தேய்த்துவிட்ட ஒரு கூட்டம், நாட்டைத் தொடர்ந்து ஆண்டுகொண்டிருந்தா, நி லை மை மேலும் மோசமாகிவிடும்......

அதை எடுத்துச்சொல்லி ஆட்சியை மாற்றி அமைக்கச்சொல்லி எல்லோரையும் கேட்டுக்கொள்வது தான் படத்தின் நோக்கம்; ரூபாவதியின் பிரலாபம்......

யார் அவ ரூபாவதி...ஏமு! ஏமு! ரூபாவதின்னு சொன்னயே, யாரு அது......

நாம பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டுக்கொண்டே எ ங் க ள வ ர் வந்துவிட்டார்போலிருக்கு பொன்னி அவரோட குரல்தான்......

சரி! சரி! பட்டு! கிளம்பு! இனி நமக்கு இ ங் கே வே லை இ ல் லை. புறப்படு......

மணிவிழா வேண்டுகோள்

துவக்க கால முதல் கழகப் பணியில் ஈடுபட்டு, பலமுறை சிறை சென்று நொந்த வாழ்க்கையை மேற்கொண்ட தோழர் T. M. பார்த்தசாரதி அவர்களின் அறுபதாம் ஆண்டு நிறைவு விழா ஏற்பாடு குறித்து இந்த என் வேண்டுகோளை வெளியிடுகிறேன்.

தி. மு. கழகம் துவக்கப்பட்டதும்; பெருத்த கஷ்ட நஷ்டத்துக் கிடையில், 'மாலை மணி' எனும் தமிழ் நாளிதழை நடத்தி கழக வளர்ச்சிக்கு வழி கோலியவர், T. M. பார்த்தசாரதி அவர்கள்.

கழக திட்டத்தின்படி, பன்முறை அறப் போரில் ஈடுபட்டுச் சிறை சென்றவர்.

எப்போதும் தம்மாலான வகையி லெல்லாம் கழகத் தொண்டாற்றி வருபவர்.

இந்தி எதிர்ப்பு அறப்போரில் ஈடுபட்டு ஆறு திங்கள் சிறைத் தண்டனை ஏற்று என்னுடன் சென்னைச் சிறையில் இருந்தவர்.

அவருக்கு அறுபது ஆண்டு நிறைவு விழா நடத்தி, கழகத் தொண்டாற்றியவரிடம் கழகத் தோழர்களும் ஆதரவாளர்களும் செலுத்த வேண்டிய மரியாதையினைச் செலுத்திட வேண்டும் என்பது என் பெருவிருப்பமாகும்.

முப்பது ஆண்டுகளாகவே, தொழிலாளர் இயக்கம், சுயமரியாதை இயக்கம். திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் எனும் பல் வேறு அமைப்புகளில் ஈடுபட்டு தொடர்ந்து தொண்டாற்றி, சொத்திழந்து கிடக்கும் நிலையினராக இருக்கிறார் என்றாலும், இன்னும் சுறுசுறுப்பாகக் கழகப் பணியாற்றி வருகிறார்.

அவருக்கு சிறப்பான முறையில் மணிவிழா நடத்தி, ஓர் பண முடிப்பளித்து மகிழ்ச்சி பெற வேண்டும் என என்போலவே பலரும் விரும்புகிறார்கள் என்று அறிகிறேன்.

இதற்கென ஒரு குழு அமைத்து சிறப்பான வெற்றி காண விழைகிறேன்.

குழு அமைப்பு பற்றி அடுத்த கிழமை தெரிவிக்க எண்ணுகிறேன்.

குழுவின் வேண்டுகோள் அறிக்கையும் அடுத்த கிழமை வெளியிட இருக்கிறேன்.

கழகத் தோழர்களும் ஆதரவாளர்களும் இந்த மணி விழா சிறப்பாக அமைவதற்கான வகையில் ஒத்துழைப்பு வழங்கிடக் கேட்டுக் கொள்கிறேன்.

அன்பன்,

அண்ணாதுரை.

சின்ன காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "அல்லி" அச்சகத்தில், (உரிமையாளர்) கி. என். ஏ. இளங்கோவனால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. ஆசிரியர் சி. என். அண்ணாதுரை.